# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

## 1991 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

*[1991, நவெம்பர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*


அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

1991, நவெம்பர் மாதம் 15 ஆந் தேதி இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 45 தபாற் செலவு : ரூபா 1.00

## 1991 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்தி (திருத்தச்) சட்டம்

[1991, நவெம்பர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ.—ஓ. 26/89

1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம் 1991 ஆம் ஆண்டின் 39 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்தி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1968 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உல்லாசப் பிரயாண அபிவிருத்திச் சட்டத்தின் 83 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:— 1968 ஆம் ஆண்டின் 14ஆம் இலக்கச் சட்டத்தின் 83ஆம் பிரிவைத் திருத்துதல்.

(1) அப்பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் "ஆகக்கூடிய விலைகளையும் வீதங்களையும் நிர்ணயித்தல்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆகக்கூடிய அல்லது ஆகக் குறைந்த விலைகளையும் வீதங்களையும் நிர்ணயித்தல்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(2) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில் (இ) என்னும் பந்தியில் "ஆகக்கூடிய வெவ்வேறு விலைகளையும் வீதங்களையும் கட்டணங்களையும் நிர்ணயிக்கலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆகக்கூடிய அல்லது ஆகக்குறைந்த வெவ்வேறு விலைகளையும், வீதங்களையும் கட்டணங்களையும் நிர்ணயிக்கலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்;

(3) அப்பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (அ) என்னும் பந்தியில் "கூடுதலான, ஆகக்கூடிய விலைகளையும் வீதங்களையும் கோரலாம் அல்லது அறவிடலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "கூடுதலான ஆகக்கூடிய அல்லது கூடுதலான ஆகக்குறைந்த விலைகளையும் வீதங்களையும் கோரலாம் அல்லது அறவிடலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம்; அத்துடன்

(4) அப்பிரிவுக்கான ஓரக் குறிப்பை நீக்கஞ்செய்து அதற்குப் பதிலாக, பின்வரும் ஓரக் குறிப்பை இடுவதன் மூலம்:—

"உல்லாசப் பிரயாண சேவைகள் தொடர்பில் ஆகக்கூடிய அல்லது ஆகக்குறைந்த விலைகள் முதலியவற்றை நிர்ணயிக்கும் தவிசாளரின் கட்டளை.".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 85 ஆம் பிரிவு, அதன் (இ) என்னும் பந்தியில், "ஆகக்கூடிய விலைகளினதும் வீதங்களினதும் பட்டியலொன்று தவிசாளரால் பணிக்கப்படலாம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "ஆகக்கூடிய மற்றும் ஆகக்குறைந்த விலைகளினதும் வீதங்களினதும் பட்டியலொன்று தவிசாளரால் பணிக்கப்படலாம்" என்னும் சொற்களை இடுவதன் மூலம். முதன்மைச் சட்டவாக்கத்தின் 85ஆம் பிரிவைத் திருத்துதல்.

ட 007547—1,170 (01/90)

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை காணப்படும் விடயத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.